DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.10/2025**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரஞ்சித்குமார் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ஆண்டி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2026

1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் நத்தமேட்டில் குடியிருந்து கிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். மல்லிகா, நீலமேகம், வளர்மதி ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரிகள் நால்வரையும் தெரியும். எதிரி செல்வராஜையும் தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 08.00 மணிக்கு நான் நத்தமேட்டிலிருந்து கட்டளைக்கு போவதற்கு எனது இருசக்கர வாகனத்தில்சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னை கடந்து மல்லிகா, நீலமேகம், வளர்மதி ஆகியோர்கள் குவாலிஸ் காரில் சென்றார்கள்.

2. எதிரிகளுக்கு நத்தமேட்டில் ஆத்துக்கு செல்லும் வழியில் சொந்தமான தோட்டத்தில் பசுமை வீடு இருக்கிறது. அங்கு சென்று மல்லிகா, வளர்மதி, நீலமேகம் மூவரும் சென்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். சத்தம் போட்டவர்களை அங்கிருந்தவர்கள் ஒதுக்கி வைத்தார்கள். பிறகு சாயங்காலம் போலிசார் மல்லிகா வீட்டிற்கு வந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 26.12.2020 அன்று காலை 07.00 மணிக்கு நான் அமராவதி ஆற்றுக்கு அருகில் போய்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது மேற்படி மல்லிகா தோட்டத்து களத்து வீட்டின் முன்புறம் TN 47 T 8393 என்ற கார் நின்று கொண்டிருந்தது என்றால் இரண்டு கார் நின்று கொண்டிருந்தது மேற்படி நெம்பரா என்று தெரியவில்லை. அப்போது எதிரிகள் ஐவரும் மல்லிகா, நீலமேகம், வளர்மதி ஆகியோரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் சரியல்ல. அங்கு ராஜேஷ்வரி விளக்குமாற்றை கையில் வைத்து கொண்டு ரகளை செய்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை.

2. 1ம் எதிரி ஜெீதுஸ்வரன் மல்லிகாவை அங்கிருந்த அரிவாளை எடுத்துக்கொண்டு உன்னையெல்லாம் வெட்டி குழிதோண்டி பிதைக்கணும் என்று மல்லிகாவை வெட்ட ஓடிவந்தார் என்றால் அந்த இடத்தில் ஆண்கள் இல்லை. பிறகு பிறகு மல்லிகாவின் வீட்டிலிருந்த கோரை கிழிக்கும் மிசின், தண்ணீர் இறைக்கும்மோட்டார் நான்கு உர மூட்டைகள், 17 கட்டுகள் கோரைகள் ஆகியவற்றை 1ம் எதிரி ஜெகதீசன் சேதப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், நன்கு அறிமுகம் ஆனவர்கள் என்பதாலும் வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**1, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.25 11:42:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.